# 51

# எருசலேமில்

## (21:12-27)

*தாம் ஒரு பகையுள்ள நகரத்துக்குள் நுழைவதை இயேசு அறிந்திருந்தார், ஏனெனில் அதிகாரிகள் அவரை வெறுத்தார்கள். மத்தேயு 21:8-11 உணர்ச்சிவசப்பட்ட ஒரு திரளான கூட்டம் பஸ்கா பண்டிகை நேரத்தில் அவரை வரவேற்றதைக் கூறுகிறது. இயேசு முதலாவதாக என்ன செய்தார்?*

## தேவாலயத்தை சுத்திகரித்தல் (21:12, 13)

**12இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து,**
**13என்னுடைய வீடு ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது, நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.**

*மத்தேயு வெற்றிகரமான நுழைவிலிருந்து நேரடியாக தேவாலயத்தை சுத்திகரிப்பதில் செய்தியைக் கொண்டு போகிறார், ஆனால் மாற்கு குறிப்பிடுகையில் வெற்றிகரமான நுழைவுக்கு அடுத்தநாள் தேவாலய சுத்தி கரிப்பு நிகழ்ந்தது, அதாவது இயேசு மறுபடியும் எருசலேமுக்கு வந்தபோது என்று சுட்டிக் காட்டுகிறார் (மாற்கு 11:11-19). இன்னொரு வார்த்தையில் சொன்னால், பாடுபடும் வாரத்தின் திங்கட்கிழமையே தேவாலய சுத்திகரிப்பு நிகழ்ந்தது.*

*தேவாலய சுத்திகரிப்பு பற்றிக் கூறப்பட்டவற்றில் சுவிசேஷத் தொகுப்புகளுக்கிடையேயும் (21:12, 13; மாற்கு 11:15-18; லூக்கா 19:45, 46) யோவான் சுவிசேஷத்தின் துவக்கத்தில் விவரிக்கப்படுகிறதுமானதில் ஒரு புதிரான கேள்வி சம்பந்தப்பட்டிருக்கிறது (யோவான் 2:13-17). இவைகள் அனைத்தும் ஒரே நிகழ்ச்சிதானா - அதாவது பாடுபட்ட வாரத்தின் போது நிகழ்ந்தது தானா? யோவான் (வரலாற்று காரணங்களுக்காக அல்லாமல்) இறையியல் காரணங்களுக்காக ஒரு வேளை தேவாலய சுத்திகரிப்பை தமது சுவிசேஷத்தின் துவக்கத்தில் சேர்த்திருப்பாரா? ஒரு வேளை இயேசுவின் ஊழியத் துவக்கத்தில் ஒருமுறையும் முடிவில் ஒருமுறையுமாக இரண்டு வேறுபட்ட நிகழ்ச்சிகளில் நடந்ததாக நாம் விசுவாசிக்க வேண்டுமா? அவைகள் இரண்டு வேறுபட்ட காலகட்ட இடங்களில் வேறுபட்ட விளக்கங்களைக் கொண்டுள்ளனவா? இயேசு தேவாலயத்தை சுத்திகரித்ததைத் தொடர்ந்து யோவான் ஒரு அறிக்கையை பின்னதாக நடக்கும் காட்சிக்கு ஆதரவாக முன்வைக்கிறார். தேவாலயத்தை கட்டும் பணி நாற்பத்தாறு ஆண்டுகள் நடந்ததாக யூதர்கள் சொன்னார்கள் (யோவான் 2:20). கி.மு.*

*19ல் தேவாலயத்தை புதுப்பித்துக் கட்டும் பணி பெரிய ஏரோதுவினால் துவக்கப்பட்டது,[1] யோவான் குறிப்பிடும் தேவாலய சுத்திகரிப்பு கி.பி. 27ல் - இயேசுவின் ஊழியத் துவக்கத்தில் நிகழ்ந்ததாகக் காட்டுகிறது.*

***வசனம் 12. இயேசு தேவாலயத்தில் பிரவேசித்தார்.*** *தீர்க்கதரிசியாகிய மல்கியா மேசியா எப்பொழுது தேவாலயத்துக்குள் பிரவேசிப்பார் என்பதை முன்னுரைத்தார். "அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்," அவர் "லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து" ஜனங்களினிமித்தம் தேவனுக்குப் பிரியமான பலிகளை செலுத்துவார்கள் என்றார் (மல்கியா 3:1-4). இது மேசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்த யூதருடைய நம்பிக்கை எசேக்கியேல் 40-48 மற்றும் சகரியா 6:12, 13ன் தரிசனத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மேசியா வரும்போது தேவாலயத்தை சுத்திகரித்து புதுப்பிப்பார் என்று நம்பினார்கள். அஞ்ஞான வெற்றிகொண்டவர்களான அந்தியோகஸ் எபிபானேஸ் கி.மு. 167 லும் பாம்பே கி.மு. 63 லும் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தின பின்பு, தேவனுடைய சொந்த ஜனங்களே செய்த பொய்யான தொழுகைமுறைகளிலிருந்தும் தேவாலயத்தை சுத்திகரித்து உயர்த்துவார் என்று அவர் எதிர்பார்க்கப்பட்டார்.[2]*

*சுத்திகரிப்பைக் குறித்த கருத்து பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் எழுதியதாகக் கருதப்படும் சுவடிகளிலும் காணப்படுகிறது: "கர்த்தாவே, பாரும், நீர் தெரிந்து கொண்ட காலத்தில் உமது தாசனாகிய இஸ்ரவேலை ஆளுகை செய்யும்படிக்கு. தாவீதின் குமாரனாகிய, ஒரு ராஜாவை, அவர்களுக்காக எழும்பப் பண்ணும் ... அவர் எருசலேமை சுத்திகரித்து (அதை) ஆதியிலிருந்த பரிசுத்தத்திற்கு, கொண்டு வருவார்."[3] மத்தேயு புத்தகத்தின் ஆரம்பத்தில். இயேசு தேவாலயத்தின் மீது தமக்குள்ள அதிகாரத்தை அறிவித்திருந்தார் (12:6ன் விளக்கவுரையைக் காண்க). தேவாலயத்தை சுத்திகரித்த நிகழ்ச்சி அதன் எதிர்கால அழிவுக்கு நியாயத்தீர்ப்பின் அடையாளமாக செயல்படுகிறது (24:1, 2), விரைவில் இயேசு ஒரு புதிய "ஆலயமாகிய" சபையை ஸ்தாபிக்கவிருந்தார், அதிலே பரிசுத்தமான பலிகள் செலுத்தப்படும் (ரோமர் 12:1, 2; 1 கொரிந்தியர் 3:16, 17; எபிரெயர் 13:15).*

*தேவாலயத்துக்கு hieron என்பதற்குப் பதில் பயன்படுத்தப்பட்ட வார்த்தை naos சுத்திகரிப்பு வெளிப்பிரகாரத்தில் மட்டும் நடந்தது என்று காட்டுகிறது. அந்த இடம் "புறஜாதிகளின் பிரகாரம் எனப்பட்டது," ஏனெனில் யூதர்களைப் போலவே அந்த இடம் புறஜாதிகளும் பிரவேசிக்கிற இடமாயிருந்தது. இந்த இடத்தில்தான் வணிகம் செய்தவர்கள் அதைத் தங்களுடைய வியாபார ஸ்தலமாக்கியிருந்தனர், naos எனும் அஞ்ஞான கோயிலில் விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கும். அதற்கு ஒப்பான யூதருடைய தேவாலயத்தில் அது பரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்பட்டது.*

*இயேசு புறஜாதிகளின் பிரகாரத்தில் பிரவேசித்த போது,* ***வாங்குகிறவர்களையும் விற்கிறவர்களுமாகிய அனைவரையும் துரத்தினார்.*** *தேவாலய சுத்திகரிப்பு குறித்து யோவான் குறிப்பிட்டபோது, ஆடுகளும் மாடுகளும் தான் அங்கே விற்கப்பட்ட பொருட்கள் என குறிப்பிட்டார் (யோவான் 2:15). தேவாயத்திலிருந்து ஒரு கணக்கிடப்பட்ட தொலைவில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு யூதர் தன்னுடைய மந்தையிலிருந்து ஒரு*

பிராணியை கொண்டு வந்து பலி செலுத்துவதற்குப் பதிலாக (எருசலேம்) பட்டணத்திலேயே வாங்கிக் கொள்ள நியாயப்பிரமாணம் அனுமதித்தது (உபாகமம் 14:24-26).

இயேசு இந்த செய்கையைத் தாக்கிப் பேசவில்லை, மாறாக அதைச் சூழ்ந்திருக்க தவறான பயன்பாடுகளையே அவர் எதிர்த்துப் பேசினார். ஒரு பிரச்சனையாக இருந்தது அது நடந்த இடம்; தேவாலயத்தின் புனிதப் பகுதியாகக் கருதப்பட்ட ஆலயப்பிரகாரத்தில் கடைகளை வைத்து வியாபாரம் செய்ததை அவர் எதிர்த்திருக்கலாம். இன்னொரு பிரச்சனை என்பது அநியாயமாக இருந்தது. பிரதான ஆசாரியர்கள் நியாயப்பிரமாணத்தை சாதகமாக்கிக் கொண்டு தங்களுடைய ஆஸ்தியைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக வியாபாரிகள் புறஜாதிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தைப் பயன்படுத்தி வியாபாரம் செய்து கொள்ள அனுமதித்தனர். அந்த வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களிடம் கூடுதல் விலைவைத்து விற்றார்கள். மேலும், ஆசாரியர்கள் வெளியிலிருந்து கொண்டுவருகிற பிராணிகளை எதிர்பேசி தடைசெய்து, தங்கள் லாபத்துக்காக விற்கப்படுகிறதை மட்டுமே ஏற்புடையதாக்க முயன்றனர்.[4]

வாங்குகிறவர்களையும் விற்கிறவர்களையும் துரத்தியடித்ததோடு, இயேசு **காசுக்காரருடைய பலகைகளையும் கவிழ்த்துப் போட்டார்.** மிஷ்னாவின் கருத்துப்படி, "காசுக்காரர்கள்" ஆதார் மாதம் இருபத்தி ஐந்தாம் தேதி அதாவது நிசான் மாதத்திற்கு முந்தின மாதம் பஸ்கா பண்டிகையில் தங்கள் மேஜைகளைப் போட்டு வியாபாரம் துவக்குவார்கள்.[5] இது பிரதானமாக தேவாலயத்து வரி செலுத்துவதினிமித்தம் செய்தார்கள் (17:24 க்கான விளக்கவுரையைக் காண்க) மற்றும் பலிசெலுத்தும் பிராணிகளை வாங்கவும் பலிக்கான பொருட்களை (திராட்ச ரசம், எண்ணெய், மற்றும் மாவு ஆகியவைகளை) வாங்க காசு மாற்றப்பட்டது.[6] ரோம சாம்ராஜ்யத்துக்குட்பட்ட சகல இடங்களிலுமிருந்து வந்த அனைத்து பக்தி யாத்ரீகர்களும் வித்தியாசப்பட்ட பணத்தையும் நோட்டுக்களையும் கொண்டு வந்ததால் அந்த இடத்துப் பணமாக மாற்றிக் கொள்வது அவசியமாயிற்று.

வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் பணத்தை மாற்றவேண்டியதாயிருந்தது, ஏனெனில் அந்த நாணயங்களில் அநேக காசுகள் அஞ்ஞானி (தேவ) உருவமோ அல்லது சக்கரவர்த்தியின் உருவமோ பொறிக்கப்பட்டிருந்தன, அது யூதர்களுக்கு குற்றமாய் கருதப்பட்டது (யாத்திராகமம் 20:4; உபாகமம் 4:16-18; 5:8). இருப்பினும், பழங்கால சான்றுகளின்படி இந்தப் பணமெல்லாம் தீருவின் நாணய மதிப்பில் மாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.[7] தீருவின் பண நோட்டுகள் எபிரேயரின் பண நோட்டுகளுக்கு அருகான மதிப்புடையவைகளாகக் கருதப்பட்டது. தீருவின் ஆண்கள் வியாபாரிகளாயும், அவர்களுடைய நாணயங்களும் சரியான எடை மதிப்புக்கும் சரியான வெள்ளி அல்லது தங்கத்தின் தொகையாகவும் அறியப்பட்டிருந்தது.[8] தீருவின் சேக்கல் (அல்லது நான்கு நாணயங்கள் என அழைக்கப்பட்ட டெட்ராச்மா) பெனிக்கேயின் தேவர்களில் ஒன்றான மெல்க்வார்ட்டை உருவகப்படுத்தி ஒரு புறமும், கழுகின் உருவம் மறுபுறமும் பொறிக்கப்பட்டிருந்தது. தீருவிலிருந்த தங்கசாலை மூடப்பட்டபின் ரோம அரசு இந்த நாணயங்களை இஸ்ரவேலில் அச்சிட அனுமதித்தது. ஆகிலும், யூதர்களுக்கு சுதந்திரமளிக்கப்பட்டது என்ற தவறான

எண்ணம் கொடுக்கப்படுவதைத் தவிர்க்கும்படி, முந்தைய உருவங்களை நாணயத்தில் பதித்து வழங்க வேண்டியதிருந்தது. கி.பி. 66ல் நடந்த யூத புரட்சி வரை தீருவின் சேக்கல்களே பயன்படுத்தப்பட்டது.

கர்த்தர் பணமாற்றத்தை குற்றப்படுத்தவில்லை. ஆகிலும் அது தேவாலயத்துப் பிரகாரத்திலே நடந்தமையால் அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுடைய தொழிலில் வரம்புக்கு மீறிபணம் வசூலிப்பதை எதிர்த்தார் என்பதில் சந்தேகமில்லை. பலிசெலுத்தப்படுகிற பிராணிகளை விற்பவர்களைப் போலவே, காசுக்காரர்களும் பிரதான ஆசாரியனுடைய ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.

**புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களை** இயேசு கவிழ்த்துப்போட்டார். ஆட்டுக்குட்டிகளுக்குப் பதிலாக புறாக்களையோ அல்லது புறாக் குஞ்சுகளையோ தான் ஏழைகள் வாங்கி பலிசெலுத்த முடியும் (லேவியராகமம் 5:7; 12:6, 8; 15:14, 29). இயேசுவின் தாயாகிய மரியாள் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேற்றப்பட்டபோது, அவருடைய பிறப்பை முன்னிட்டு பிரதிஷ்டை செய்யும்போது இதே பலிதான் செலுத்தினாள் (லூக்கா 2:24). மிஷ்னா இதைக் குறிப்பிடுகையில் புறா விற்கிறவர்கள் முறையில்லாமல் விலைவைத்து, ஜனங்களை ஏமாற்றினார்கள் என குறிப்படுகிறது.[9] இயேசு இந்த வியாபாரிகளை (கொள்ளையர்கள்) கள்ளர்கள் என்று சொன்னதில் ஆச்சரியமில்லை (21:13)!

மாற்கு 11:16 ன்படி, இயேசு "ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டு போக விட வில்லை." இந்தத் தடை செய்யப்படுதல் "மிஷ்னாவில் எழுதப்பட்டுள்ளவைகளோடு ஒத்துப் போகிறது"; ஒருவனும் (தேவாலய மலையை) குறுக்கப்பாதையாகப் பயன்படுத்தக் கூடாது.[10]

**வசனம் 13.** இயேசு இந்த வியாபாரிகளையும் காசுக்காரர்களையும் வெளியே துரத்தின போது, அவர் தேவாலயத்தின் உண்மையான நோக்கத்தை மேற்கோள் காட்டினார்; **என்னுடைய வீடு ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது** (ஏசாயா 56:7). இயேசுவின் குற்றச்சாட்டு, Donald A. Hagner's கருத்துப்படி பயன்படுத்தினால், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களுக்கு ஒத்திருப்பதைக் காணமுடியும்: தேவாலயத்து நடவடிக்கைகளான ஆராதனைகள் உண்மையான தேவனோடு கொள்ளும் தொடர்புக்குப் பதிலாக இயந்திரத்தனமான சடங்காச்சாரங்களாகி அதை மேற்கொள்கிறது (எரேமியா 7:21-23; ஆமோஸ் 5:21-24; மீகா 6:6-8).[11] மேலும் மாற்கு 11:17ல் ஏசாயா 56:7ன் வார்த்தைகளோடு கூடுதல் சொற்றொடராக "சகல ஜனங்களுக்கும்" என்று பேசுகிறது. மத்தேயு புத்தகத்தில் இந்தச் சொற்றொடர் சேர்க்கப்படாவிட்டாலும், இச்சொற்றொடர் குறிப்பிடத்தக்கது, ஏனெனில் புறஜாதிகளின் பிரகாரம்தான் சந்தை வெளியாக மாற்றப்பட்டிருந்தது. யூதர்களின் வியாபார நடவடிக்கைகள் தேவனைத் தொழுது கொள்ளும்படி நேர்மையாகப் பிரயாசப்பட்ட புறஜாதிகளுக்கு இடையூறாக இருந்திருக்கும். இந்த புறஜாதிகள் ஆலயத்தின் உள் பிரகாரங்களில் பிரவேசிக்க தடை இருந்தது.[12]

இயேசு தொடர்ந்து, **நீங்களோ இதை கள்ளர் குகையாக்கினீர்கள் என்று சொன்னார்.** இந்த வார்த்தை நடை எரேமியா 7:11லிலிருந்து பெறப்பட்டது:

*“ ‘என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்கு கள்ளர் குகையாயிற்றோ? இதோ, நானும் இதைக் கண்டேன்,’ என்று கர்த்தர் சொல்லுகிறார்.” அந்த வசனப்பகுதியில், யூதாவின் ஜனங்கள் தேவனுக்கு முன்பாக விசுவாசம் நிறைந்த பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதைக் காட்டிலும், தங்கள் மத்தியில் இருக்கும் அவருடைய ஆலயத்தை அதிகமாய் நம்பினார்கள். அவர்கள் குகையிலே மறைந்து கொண்டு, தங்களுடைய பாவங்கள் தங்களை தண்டிக்காது என்று எண்ணிக் கொண்டிருக்கிற கள்வர்களைப் போலிருந்தார்கள். இந்த வார்த்தை மொழியை இயேசு தமது நாளில் நின்று கொண்டிருந்த தேவாலயத்துக்குப் பயன்படுத்தி பேசினார்.* Michael J. Wilkins *பின் வருமாறு எழுதினார்,*

> *மதத்தலைவர்கள் தேவாலயத்தை, கள்ளர்கள் குகைகளை நடத்துவது போல நடத்திக் கொண்டிருந்தார்கள் - அவர்கள் அதை சட்ட விரோத செயல்களுக்கு ஒட்டுமொத்த அடைக்கலமாகவும் கொள்ளையிட்ட ஆஸ்திகளின் வைப்பிடமாகவும் வருங்கால சூழ்ச்சித்திட்டங்களை ஆலோசிக்கும் இடமாகவும் நடத்தினர். பலஸ்தீனா பகுதியில் குகைகள் கள்ளர்களின் இருப்பிடமாகவே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன, எனவே இயேசு பயன்படுத்தின உருவகமொழி அவரிடத்தில் கேட்டவர்களுக்கு தெளிவாகியிருக்கும்.*[13]

*இயேசுவின் செயல்கள் - மேஜைகளை கவிழ்த்துப்போட்டு ஆசனங்களையும் கவிழ்த்து வியாபாரிகளை வெளியே துரத்தின செயல்களுக்கு தேவாலயத்து அலுவலர்களாலோ ரோம அரசின் போர் சேவகர்களாலோ உடனடிபதில் கிரியை நடப்பிக்கப்படவில்லை (காண்க நடபடிகள் 21:27-36). ஜனங்களிடத்தில் அவர் பிரசித்தி பெற்றிருந்த நிலைமை அவருக்கு விரோதமாக யூத மதத்தலைவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்காதபடி தடையாக இருந்தது. ஆகிலும் அவர்கள் “அவரை அழிப்பதற்கான” வழியைத் தேட ஆரம்பித்து விட்டார்கள் (மாற்கு 11:18). வியாபாரம் செய்தவர்களும் காசுக்காரர்களும் தேவாலய முற்றத்திற்குத் தெற்கே ராஜாவின் முற்றத்தில் தங்கள் வியாபாரத்தைக் கொண்டிருந்ததால், அந்தோனியா கோட்டையில் ரோம ராணுவம் தங்கியிருப்பது எதையும் கவனிக்க மிகவும் கடினமானதாக இருந்திருக்க வேண்டும். வடமேற்கு மூலையில் இருந்து கொண்டு கூட்டத்தின் நடுவில் என்ன நடக்கிறது என்று பார்ப்பது இயலாதது.*

## எருசலேமில் நடப்பித்த கடைசி அற்புத சுகம் (21:14-17)

**[14]அப்பொழுது, குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களை சொஸ்தமாக்கினார்.**

**[15]அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்து,**

**[16]அவரை நோக்கி, இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள்.**

**அதற்கு இயேசு, ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? என்றார்.**

***17*அவர்களை விட்டு நகரத்திலிருந்து புறப்பட்டு, பெத்தானியாவுக்குப் போய், அங்கே இராத்தங்கினார்.**

***வசனம் 14.*** இயேசு சில தனிப்பட்டோரை **தேவாலயத்திலிருந்து** வெளியேற்றி, வியாதிப்பட்டவர்களையும் **அவரிடத்தில் வந்த** இன்னும் **அநேகரையும் இயேசு சொஸ்தமாக்கினார்.** வசனப் பகுதியில் குறிப்பாக **குருடர்களையும் சப்பாணிகளையும்** இயேசு சொஸ்தப்படுத்தினார் என்று சொல்லுகிறது (காண்க 11:5; 15:30, 31). லேவியராகமம் 21:17, 18 ன்படி, குருடரும் சப்பாணியுமாயிருந்த ஆரோனின் சந்ததியினர் பலிபீடத்தில் பணியாற்ற இயலவில்லை. இன்னும் மேலாக, மிஷ்னாவில் பண்டிகை நாட்களில் குருடரும் சப்பானிகளும் பலிகளோடும் காணிக்கைகளோடும் தேவனுடைய சமூகத்தில் கிட்டிக் சேரக் கூடாது என்று பணிக்கப்பட்டார்கள்.[14] புறஜாதிகளின் பிரகாரத்தில், வரமுடிந்தாலும், உள் பிரகாரத்தில் வரலாகாது என்று சொல்லப்பட்டிருந்தது (2 சாமுவேல் 5:8; LXX).[15] சரீரரீதியாக இயேசு இவர்களை மீட்டகாரியம் அவர்களுடைய ஆவிக்குரிய ரீதியில் தேவனோடு தொடர்பு கொள்ள ஏதுவாக்கியது. முந்திய வசனங்களில் குறிப்பிட்டபடி, தேவாலயத்துக்கு வருகிறவர்கள் தேவனுக்கு அருகாமையில் கிட்டிச் சேர்ந்து அவரைத் தொழுகை செய்வதை இயேசு விரும்பினார். தம்மை சிலுவையில் அறைவதற்கு முன்பு இயேசு எருசலேமில் நடப்பித்த கடைசி அற்புதங்கள் இவைகளே.

***வசனம் 15.*** யூதமதத் தலைவர்களும், **பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும்,** இந்த இடத்திலிருந்து முதன்மை வகித்து செல்வதை மத்தேயு குறிப்பிடுகிறார் (2:4 ற்கான விளக்கவுரையைக் காண்க). அவர்கள் ஏற்கனவே இயேசுவினிடத்தில் கோபமாயிருந்தார்கள்; அவர்கள் அவரோடு **கோபமடைய** இன்னும் கொஞ்சம் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர். தேவாலயத்தை சுத்தி கரித்ததினிமித்தம் அவர்கள் கோபத்திலிருந்தார்கள் (மாற்கு 11:18), ஆனால் பிறகு இயேசு செய்த **அற்புதங்களைக் கண்டார்கள்.** அவர் அற்புதமாக சொஸ்தமளிப்பதைக் கண்டு பிரமித்து ஆச்சரியப்படுவதற்குப் பதிலாக, இன்னும் அதிகமாக எரிச்சலடைந்தார்கள். இந்த நேரத்தில், **தேவாலயத்தில் இருந்த** அநேகம் **பிள்ளைகள்** கூட்டத்தின் ஆரவாரத்தைத் தொடர்ந்து கிறிஸ்துவுடன் பட்டணத்துக்குள் பிரவேசித்து, **தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா** என்றார்கள் (21:9).

***வசனம் 16.*** யூதமதப் போதகர்கள் இயேசுவைக் கடிந்து கொண்டு, அதன் விளைவாக, **பிள்ளைகளை** அமைதிப்படுத்தும்படி நிர்ப்பந்தித்தார்கள், தேவாலயத்தை சந்தை வெளியாக்கினதை விட்டுவிட்டு, பிள்ளைகளின் துதிச் சொற்கள் அவர்களுக்கு எதிரிடையானதாகக் காணப்பட்டது.[16] இயேசுவை, போதகராக (ரபீயாக) மட்டும் பார்த்த அவர்களால், அவர் "தாவீதின் குமாரன்" என்று அழைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. Craig S. Keener குறிப்பிடுகையில், இந்த மதத்தலைவர்களைப் பொறுத்தமட்டில், இயேசுவும் "மற்றவர்களை கவரும் தன்மை பெற்ற நபர்களில் ஒருவர்தான்,

*அவருடைய சுய கௌரவம் அவரது மதிப்பை உயர்த்திக் காட்டுகிறது" என்று எண்ணினார்கள் என்றார்.*[17] ஆகிலும், இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக ஏதோ இருந்திருக்க வேண்டும். இந்தத் தலைவர்கள் இயேசுவின் தெய்வீகத் தன்மைக்கு எதிர்த்து நின்றவர்கள், மற்றும் இப்பொழுது அவரைப் புறந்தள்ளமுற்பட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய வார்த்தைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளுவதற்குப் பதிலாக, இயேசு சங்கீதம் 8:2ஐ எபிரேயுவிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழியாக்கம் செய்யப்பட்டதிலிருந்து: **குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்க வில்லையா?** என்றார். "நீங்கள் ஒருபோதும் வாசிக்கவில்லையா ... ?" எனும் கேள்வி இயேசுவின் ஒரு குறிப்பிட்ட பேச்சு நடை (12:3 ற்கான விளக்கவுரையைக் காண்க). "குழந்தைகள்" (*nēpios*) "பாலகர்" (*thēlazō*) ஆகியவை மூன்று வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் குறிக்கும், யூத குழந்தைகள் வழக்கமாக பால் மறக்கச் செய்யும் பருவம்.[18] இயேசுவை துதித்த பிள்ளைகள் சங்கீதத்தில் சொல்லப்படுகிற பிள்ளைகளைக் காட்டிலும் இன்னும் வயதில் மூத்திருந்த பிள்ளைகள். அவர் சுட்டிக் காட்டிய கருத்து என்னவெனில், பாலுண்கிற குழந்தைகள் முதற் கொண்டு தீர்க்கதரிசனத்தின்படித் தம்மைத் துதித்தாலும், இந்த வயதில் மூத்திருக்கிற பிள்ளைகள் துதிக்கக் கூடாது என்று இந்த யூதர்கள் ஏன் எதிர்பார்க்கின்றனர்? இதற்கு முன் இயேசு தேவனிடத்தில் நம்பிக்கை வைப்பதை பிள்ளைகளை உதாரணப்படுத்தி பேசினார் (18:1-4; 19:13-15).

**வசனம் 17.** இயேசு எதிர்பாராமல் யூத தலைவர்களை தேவாலயத்தில் விட்டு **நகரத்திலிருந்து புறப்பட்டுப் போனார்**. அவர் **பெத்தானியாவுக்குப் போய், அங்கே இராத்தங்கினார்** (21:1 ற்கான விளக்கவுரை காண்க), முதலாவதாக அவர் பெத்தானியாவுக்குப் போனார் (யோவான் 12:1), அங்கே பாடுபட்ட வாரம் முழுவதும் திரும்பிச் சென்றிருந்தார். அவர் அங்கே லாசரு, மார்த்தாள், மரியாள் ஆகியோருடைய வீட்டிலே தங்கியிருந்திருக்கலாம். இந்த வேளையில் ரோமரின் உலக முழுவதிலும் இருந்து வந்திருந்த பக்தி யாத்திரீகளால் எருசலேம் பட்டணம் நிரம்பி வழிந்தது. பெத்தானியா எருசலேமுக்கு அருகில் இருந்தமையால் இயேசுவும் அவருடைய சீஷர்களும் பட்டணத்திற்குள் சுலபமாக சென்று மாலையில் வீடுதிரும்பினர். இருப்பினும், யூதமதத் தலைவர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கத் தக்க தொலைவில் இருந்தது.

## அத்திமரத்தை சபித்தல்[19]
## (21:18-22)

**[18]காலையிலே நகரத்துக்குத் திரும்பி வருகையில், அவருக்கு பசியுண்டாயிற்று.**

**[19]அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று.**

***[20]சீஷர்கள் அதைக் கண்டு, இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய் பட்டுப் போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.***

***[21]இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***[22]மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.***

***வசனம் 18.*** *பாடுபடும் வாரத்தைக் குறித்த விஷயத்தில் மத்தேயுவும் மாற்கும் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பதாக, முதலாவதாகக் காண்கிறோம்; ஆனால் இந்த சுருக்கக் கருத்தை சுவிசேஷ எழுத்தாளர்கள் வித்தியாசப்பட்ட அணுகுமுறையில் கையாளுகின்றனர் என்பதை நாம் உணரும்போது, அந்தப் பிரச்சனை விருதாவாகிறது. மாற்கு வரலாற்று ரீதியாக தனது அணுகுமுறையைக் கொண்டுள்ளார். அவர் எழுதும்போது, அத்திமரத்தை சபிக்கிற முதல் பகுதி திங்கட்கிழமையும், இரண்டாம் பகுதி செவ்வாய்க்கிழமையும் நிகழ்ந்தது, இந்த இரண்டு நிகழ்வுகளுக்கு இடையில் திங்கட்கிழமை தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டது நடந்தது என்று எழுதினார் (மாற்கு 11:1, 12, 19, 20). இதற்கு மாறாக, மத்தேயு இதை தலைப்பு ரீதியான அணுகுமுறையில் எடுத்துக் கொண்டு, அத்திமரத்தைக் குறித்து முழுக்கதையையும் சொல்லுகிறார். மாற்கு எழுதியதில் மத்தேயு 21:18, 19ல் நடந்த நிகழ்வைத் திங்கட்கிழமையாகவும், 21:20-22ன் பகுதியை செவ்வாய்க்கிழமை நிகழ்வாகவும் குறிப்பிடுகிறார்.*[20]

*பெத்தானியாவிலிருந்து (21:17) தமது சீஷர்களுடன் இயேசு எருசலேமுக்குப் போகையில்* ***அவருக்கு பசியுண்டாயிற்று.*** *இந்த வாக்கியம் கர்த்தருடைய மனுஷீகத்தை வலியுறுத்துகிறது, அதே போல பிற வசனங்களில் அவர் களைப்போடும் தாகத்தோடும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது (யோவான் 4:6, 7; 19:28). இச்சம்பவம்* ***காலையிலே*** *நடந்தது. இது பெத்பகேயுக்கு அருகில் நடந்ததாகக் கருதப்படுகிறது (21:1). இயேசு ஏற்கனவே காலை உணவைப் புசித்திருந்தாரா என்று வசனம் சொல்லுவதில்லை.*

***வசனம் 19.*** *அவர்கள் நடந்து போய்க் கொண்டிருக்கையில்,* ***ஒரு அத்திமரம் தனியாக நின்று கொண்டிருப்பதை*** *இயேசு பார்த்தார். அவர் மரத்தினருகே சென்று* ***பார்த்தபோது, இலைகளைத் தவிர வெறெதுவும் காணப்படவில்லை.*** *மார்ச் மாதத்தில் அத்தி இலைகளோடு கூட சிறிய அத்திப்பழங்கள் தோன்றுவது இயல்பு, அவை டாக்ஸ் என்று அராபியர்களால் அழைக்கப்பட்டது. இவைகள் புசிக்கத் தக்கவை, இவை அறுவடை செய்யப்பட்டு சந்தையில் விற்கப்பட்டது. ஆகிலும், முதிர்ந்த அத்திப்பழங்கள் கோடைகாலத்தில் அறுவடை செய்யப்பட்டன. அது முழு "பருவ அத்திப்பழக் காலமாயிராதிருந்தபோதும்," மேற்குறித்தபடி ஏதாகிலும் கிடைக்கும் என்று இயேசு தேடினார் (மாற்கு 11:13).* R. K. Harrison *என்பவர், "இளவேனிற்காலத்தில் இலைகள் துளிர்த்து வரும்போது, ஒவ்வொரு சத்துள்ள மரமும் தன்னில் ஏதாவது சில டாஸ்க்ஸ் அத்தி பழங்களை கொண்டிருக்கும் . . . ஆனால் ஒரு மரம் நிறைய இலைகளைக்*

கொண்டிருந்தும் பழமில்லாமற் போனால், அது பருவ காலத்திலும் கனி கொடாத மலட்டுமரமாகத்தான் இருக்கும்,"[21] என்று சொன்னார்.

மரத்தில் பழம் இல்லை என்பதைக் கண்ட போது, இயேசு **இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது** என்றார். மாற்கு 11:14ல், அவர் "இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் புசியாதிருக்கக் கடவன்!" என்று சொன்னார். மத்தேயு இயேசுவின் வார்த்தைகளின் வல்லமைகளை வலியுறுத்தி உடனே **அத்திமரம் பட்டுப்போயிற்று** என்று வெளிப்படுத்தினார். இந்த அத்திமரம், இலைகளைக் கொண்டிருந்தும் இடைக்காலத்து அத்திக்கனி இல்லாமையால், தேவனுக்கென்று சரியான கனி கொடாத மரமாக விளங்கிய அநேக யூதர்களுக்கு அது அடையாளமாக இருந்தது (மீகா 7:1, 2; மத்தேயு 7:19). அவர்கள் யோவான் ஸ்நானனின் பிரசங்கத்தைக் கேட்டோ அல்லது இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டோ மனந்திரும்பவில்லை (3:8, 10; 11:16-24). அவர்களின் தேவாலய தொழுகை கெட்டுபோயிருந்தது. அவர்கள் மேசியாவை புறந்தள்ளி விரைவில் அவருக்கு மரணத்திற்கான வழியை ஏற்படுத்தவிருந்தனர். இதன் விளைவாக, எருசலேமும் தேவாலயமும் முடிவில் அழிந்து போகும் (24:1, 2).

**வசனம் 20.** அடுத்த நாள் காலையில் (மாற்கு 11:20), அவர்கள் எருசலேமுக்கு திரும்பிக் கொண்டிருக்கையில், **சீஷர்கள்** அந்த **அத்திமரம் வேரோடே காய்ந்திருப்பதைக் கண்டார்கள்.** அவர்கள் அது காய்ந்து கொண்டிருப்பதைக் காணவில்லை, ஆனால் அது, ஏற்கனவே பட்டுப் போய் காய்ந்திருப்பதைப் பார்த்தார்கள். அது கொஞ்சம் கொஞ்சமாக காய்ந்துபோகாமல், இயற்கைக்கு அப்பாற்பட்ட ரீதியில் அந்தமரம் செத்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள்; கர்த்தர் சபித்தபின் ஒரே நாளில் அந்த மரம் செத்துப்போயிற்று. பேதுரு முந்தின நாள் செயலை நினைவுகூர்ந்து, "அவரை நோக்கி," "ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப் போயிற்று" என்றான் (மாற்கு 11:21). சீஷர்கள் இந்த அற்புதத்தை ஆச்சரியமாய் நினைத்தார்கள். மூன்று வருஷங்களுக்கு மேலாக அவர் அநேக அற்புதங்கள் செய்வதை பார்த்திருந்தும் அவர்கள் இப்பொழுது ஆச்சரியப்படுவதைக் குறித்து ஒருவர் அதை புதுமையாகப் பார்த்திருக்கலாம். அந்தவேளையில், அவர்கள் அதன் செய்தி எருசலேமின் அழிவைக் குறித்ததான அடையாளச் செய்தியாக அறிந்து கொள்ளவில்லை.

**வசனம் 21.** இயேசு அற்புதம் "ஏன்" நடந்தது என்று குறிப்பிடாமல் "எப்படி" நடந்தது என்று விளக்கப்படுத்தினார்.[22] அவர்கள் **சந்தேகப்படாமல்** தேவன் மேல் உண்மையான **விசுவாசமுள்ளவர்களாயிருந்தால்** (14:31ஐக் காண்க), இதைக் காட்டிலும் பெரிய கிரியைகளை அவர்கள் செய்யக் கூடும் என்று சொன்னார். இங்கு அவர் சொன்னது தமது அப்போஸ்தலர்களுக்கு நேரடியாகக் கொடுத்த கட்டளை இது; அவரைப் பின்பற்றுவோர் எப்பொழுதும் தொடர்ந்து அற்புதங்களைச் செய்யக் கூடும் என்று அவர் சொல்ல வில்லை.

**மலையை பெயர்ந்து சமுத்திரத்தில்** விழச் செய்யவும் அப்போஸ்தலர்களால் முடியும் என்று இயேசு சொன்னார். தமது சீஷர்கள் உண்மையான மலையைப் பெயர்த்து சமுத்திரத்தில் தள்ளிவிட வேண்டும் என்று இயேசு விரும்பியதில்லை, இதை உருவகமொழியாகப் பயன்படுத்துகிறார். மலையைப் பெயர்ப்பது என்பது செய்யக் கூடாத, அளவுகடந்த கடினமான காரியத்தை

*செய்து சாதிப்பதை யூதர்கள் மத்தியில் பேசிக்கொள்ளப்பட்ட வழக்கச் சொல் அது (காண்க 17:20 க்கான விளக்கவுரை).*

***வசனம் 22.*** *பிறகு இயேசு சொன்னார்,* ***விசுவாசமுள்ளவர்களாய், ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்.*** *இயேசு அப்போஸ்தலர்களுக்கு கொடுத்த உபதேசங்களில் இது ஒரு பகுதியானதால், இதன் பொதுவான உபதேசம் எல்லாருக்கும் பொருந்தக் கூடியவை: கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும் போது, தேவன் ஜெபத்தைக் கேட்கிறார் என்றும் அதற்கு பதிலளிக்கிறார் என்றும் விசுவாசிக்க வேண்டும் (காண்க 1 பேதுரு 3:12). யாக்கோபு தன்னுடைய வாசகர்களுக்கு, "கேட்கிறவன் சந்தேகப்படாமல் கேட்க வேண்டும்" என்று அறிவுறுத்துகிறார் (யாக்கோபு 1:6). அப்படிப்பட்ட ஜெபங்கள் சுயத்தை மையம் வைத்ததாக இருக்கக் கூடாது. யோவான் கிறிஸ்தவர்களுக்கு ஜெபிக்கப் போதித்து, "[தேவனுடைய] சித்தத்தின்படி" வேண்டுதல் செய்யச் சொல்லுகிறார் (1 யோவான் 5:14, 15). தேவன் எப்பொழுதும் தமது பிள்ளைகளின் ஜெபத்துக்குப் பதிலளிக்கிறார், ஆகிலும் அவர் எப்பொழுதும் "ஆம்" என்று பதில் கொடுப்பதில்லை. "இல்லை" என்று சொல்லுவதும் அவருடைய பதில் தான் (காண்க 2 கொரிந்தியர் 12:7-9).*

## இயேசுவின் அதிகாரத்திற்கு அறைகூவல் *(21:23-27)*

***23அவர் தேவாலயத்தில் வந்து, உபதேசம் பண்ணுகையில், பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து, நீர் எந்த அதி காரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? என்று கேட்டார்கள்.***

***24இயேசு பிரதியுத்தரமாக, நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்வீர்களானால், நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன்.***

***25யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேட்டார். அதற்கு அவர்கள். தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்று நம்மைக் கேட்பார்.***

***26மனுஷரால் உண்டாயிற்று என்று சொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்படுகிறோம், எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணி, இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக, எங்களுக்குத் தெரியாது என்றார்கள். அப்பொழுது அவர், நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்.***

***வசனம் 23.*** *இயேசு எருசலேமுக்கு வந்தபோது, அவர்* ***தேவாலயத்துக்குத்*** *திரும்பினார். பாடுபட்ட வாரத்தில், பஸ்கா பண்டிகைக்கு வந்த ஜனங்களுக்கு போதிக்கும்படி அநேக சந்தர்ப்பங்களை இயேசு எடுத்துக் கொண்டார். அவர் புறஜாதிகளின் பிரகாரத்தில் வெளிப்பக்க ஓரத்தில் இருந்த மண்டபத்தில்*

போதித்தார். அவைகளில் ஒன்று சாலொமோனின் மண்டபம் கிழக்குப் புறம் இருந்தது, இந்த இடம் தான் ஆதிசபை கூடிவரும் இடமாக இருந்தது (நடபடிகள் 3:11; 5:12; காண்க யோவான் 10:23).

யூத மதத்தலைவர்கள் யோவான் ஸ்நானனைக் கேள்வி கேட்டது போலவே (யோவான் 1:19-28), அவர்கள் இயேசுவையும் கேள்வி கேட்டார்கள்.[23] அவருடைய **போதனை** வேளையில் ஒருமுறை, அவர்கள் கேட்டார்கள்: **நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? உமக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தவர் யார்?** அநேக நிகழ்வுகள் இந்த மனுஷருடைய கவனத்தை ஈர்த்திருந்தது: வெற்றிகரமான பிரவேசம் (21:1-11), தேவாலய சுத்திகரிப்பு (21:12, 13), குருடரும் சப்பாணிகளும் சொஸ்தமாக்கப்படுதல் (21:14), மற்றும் பிள்ளைகளின் துதிச் சொற்கள் (21:15-17). இந்த இடத்தில், இயேசு ஒரு ரபீயைப் (போதகரைப்) போல நடந்து கொண்டார், ஆகிலும் அவர் எருசலேமிலிருந்த எந்த மதத்தலைவர்களாலும் (போதகராக) பிரதிஷ்டைப் பண்ணப்படவில்லை. அவருடைய அதிகாரம் பிதாவினிடத்திலிருந்து வந்தது (காண்க 7:28, 29; 9:6; 10:1; 28:18).

**வசனம் 24. இயேசு** மதத்தலைவர்களிடம், அவர்கள் தம்முடைய ஒரு கேள்விக்கு பதிலளிப்பார்களானால், அவர் தம்முடைய **அதிகாரம்** எங்கிருந்து வந்தது என்று பதிலளிப்பதாகக் கூறினார். கிறிஸ்து பெரும்பாலும் ஒரு கேள்விக்குப் பதிலாக மற்றொரு கேள்வியினால் பதிலளித்தார். W. F. Albright மற்றும் C. S. Mann குறிப்பிடுகையில், "கேள்வி கேட்டு அதற்கு மறுகேள்வி கேட்டு பதில் கொடுப்பது, நழுவது போல் காணப்படலாம், ஆனால் பழங்கால கிரேக்க பண்பாட்டின்படியான விவாதமும், பின்னர் ரபீமார்களின் காலத்திலும் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கர்களின் முறையாகவும் அப்படியிருந்துள்ளது."[24] இந்த தலைவர்கள் நேர்மையானவர்களாயிருந்திருப்பின், அவர்கள் இயேசுவுக்கு அளிக்கும் (வாக்குவாதங்களால்) பதிலிலேயே அவர்களுடைய கேள்விக்கும் பதில் இருந்திருக்கும்.

**வசனங்கள் 25, 26.** பிதரான ஆசாரியர்களிடத்திலும் ஜனத்தின் மூப்பரிடத்திலும் இயேசு **யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ அல்லது மனுஷரால் உண்டாயிற்றோ?** "பரலோகம்" "தேவனுக்குப்" பதிலாக யூதர்களால் பயன்படுத்தப்பட்டச் சொல்; தெய்வீகத்தின் பெயரை தவறாகப் பயன்படுத்துவதைக் தவிர்க்க இந்த வழி பயன்படுத்தப்பட்டது (யாத்திராகமம் 20:7). தேவனிடத்திலிருந்தா அல்லது மனுஷரிடத்திலிருந்தா என்ற இரண்டு தெரிவுகள் மட்டுமே, இவை இரண்டுமே வெவ்வேறு தன்மைகளை உடையவை (காண்க நடபடிகள் 5:38, 39).

இந்தத் தலைவர்கள் தங்கள் கேள்வியினாலேயே வசமாக சிக்கிக் கொண்டதை உணர்ந்தார்கள். **பரலோகத்திலிருந்து** (தேவனிடத்திலிருந்து) என்று சொன்னால் பிறகு இயேசு சரியாக வாதிட ஏதுவாக, **பின்னை ஏன் அவனை விசுவாசிக்க என்பார்.** யோவானை தீர்க்கதரிசி என்று ஏற்றுக்கொண்டால் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், ஏனெனில் யோவான் இயேசுவின் அடையாளங்களை சாட்சியிட்டார் (யோவான் 1:29-34). ஆயினும், அவர்கள் யோவானை புறந்தள்ளிவிட்டனர் (21:32). **மனுஷர்களிடத்திலிருந்து** வந்தது என்று சொன்னால், **ஜனங்களிளெல்லாரும் யோவானை தீர்க்கதரிசியாக**

***ஏற்றுக் கொண்டிருக்கிறபடியால்*** *அவர்களால் கலகம் உண்டாகும் என்று பயப்பட்டார்கள் (14:5).*

***வசனம் 27.*** *பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் சத்தியத்தைத் தேடுவதற்குப் பதிலாக தங்கள் பதவிகளையும் அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொள்வதில் அதிக அக்கரை காட்டினார்கள். எனவே இந்த மனுஷர்கள்* ***எங்களுக்குத் தெரியாது*** *என்று* ***இயேசுவுக்கு*** *பதில் அளித்தனர். தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்குப் பதிலாக, அரசியல் ரீதியான சரியான வழியாக நடுநிலை பதிலை அளித்தனர். இதன் விளைவாக, இயேசு பதில் அளித்து,* ***நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன்*** *என்றார். கர்த்தருடைய பதில், "அவர்களுடைய மாய்மாலத்தை எதிர்ப்பதோடு இந்த அதிகாரம் யோவானைப் போன்றது தான் என ஜனங்கள் அறியக்கதக்கதாக தெளிவாக்கினார்."*[25]

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## *பெலவீனர்களுக்காக மனதுருக்கம் (21:14-17)*

*சமுதாய அந்தஸ்தைக் கொஞ்சமாகவோ அல்லது முற்றிலுமாகவோ பெறாதவர்களிடம் இயேசு தமது மனதுருக்கத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காட்டினார். குருடரையும் சப்பாணிகளையும் அவர் சுகப்படுத்தி, அவர்கள் பிச்சை எடுப்பதிலிருந்தும் பரிதாபமான நிலையிலிருப்பதிலிருந்தும் மீட்டார். அவர்களுக்கு சரீர சுகமளித்தல் ஆவிக்குரிய ரீதியிலும் ஆசீர்வாதமாயிருந்தது, தேவாலயத்தில் தேவனோடு இன்னும் கிட்டிச் சேர வழிகாட்டியது. பலதரப்பட்ட வியாதிகளாலும் தீங்குகளாலும் பாதிக்கப்பட்டு உபத்திரவப்படுகிற மக்களிடம் நாமும் இரக்கம் காட்டவேண்டும். இதற்கு மேலாக, அவர்களுடைய ஆத்துமாக்களைக் குறித்து அதிக அக்கறை காட்ட வேண்டும்.*

*இயேசு சிறுபிள்ளைகளிடம் அதிகமான ஆர்வம் காட்டினார். அவர்களுக்கென நேரம் எடுத்து அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களுடைய ஸ்தோத்திரங்களை சந்தோஷமாய் அவர் ஏற்றுக் கொண்டார். குழந்தைகளின் பிறப்பிலிருந்தே இயேசுவின் அன்பை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து தொடர்ந்து பிரயாசப்பட வேண்டும். நாம் அவர்களுக்குப் போதித்து, ஊக்கப்படுத்தி, அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.*

டேவிட் ஸ்டீவர்ட்

## *பட்டுப்போன மரங்களும் புறக்கணிக்கப்பட்ட கற்களும் (21:18-46)*

*மத்தேயு 21:18-46ல், இயேசு தமது நாட்களிலிருந்த அவிசுவாசமுள்ள யூதர்கள் தேவனுக்கு எதிரான கலகம் பண்ணினபடியால் இயேசு அவர்களை எதிர்த்தார்.*

*1. கனியில்லாத அத்திமரம் (21:18-22).* தொலைவிலிருந்து பார்க்கும் போது, கனிகள் இருப்பது போல் காட்சியளித்த ஆனால் அருகில் வந்து

பார்க்கும் போது ஒன்றுமில்லாத அத்திமரத்தால் கர்த்தர் ஏமாற்றமடைந்தார். அந்த நேரத்தில் வாழ்ந்த அநேக தேவனுடைய ஜனங்களின் பொருத்தமான அடையாளமாக அது இருந்தது. அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இருந்தது, ஆதலால் அவர்கள் நீதியின் கனிகளை கொடுத்திருக்க வேண்டியவர்கள், ஆனால் கொடுக்கவில்லை. எருசலேமின் மீது வரவிருந்த ஆக்கினையை அடையாளப்படுத்தும் வண்ணமாக அத்திமரத்தை அவர் சபித்தார். இயேசு ஏன் இப்படிச் செய்தார் என்பதை சீஷர்கள் அறிந்து கொள்ள முடியவில்லை, அவர் அதை எப்படிச் செய்தார் என்பதில் அதிர்ச்சியடைந்திருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கர்த்தர் விசுவாசத்தைக் குறித்து அவர்களுக்குப் போதித்தார்.

2. *விசுவாசமற்ற ஒரு ஜனக்கூட்டம்* (21:23-32). அநேக அற்புதங்களை இயேசு செய்திருந்தபோதிலும் யூத மதத்தலைவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. மாறாக இவைகளை செய்வதற்குரிய அதிகாரம் எங்கிருந்து வந்தது என்று கேள்வி கேட்டார்கள். சத்தியத்தைத் தேடாமல் அவர்கள் இயேசுவை குற்றஞ் சுமத்துவதிலேயே குறியாயிருந்தார்கள். இரண்டு குமாரர்களைப் பற்றிய உவமையில், அவர்களுடைய கீழ்ப்படியாமையை வெளிச்சமிட்டுக் காட்டினார்.

3. *தோல்வியுற்ற ஒரு முறை* (21:33-46). வீட்டெஜமான் மற்றும் அவனுடைய திராட்சத் தோட்டத்தைப் பற்றிய உவமையில், யூத தலைவர்கள் தேவனுடைய சித்தத்தை அடிக்கடி புறந்தள்ளுகிறவர்களாயிருந்தார்கள் என்பதை இயேசு வெளிப்படுத்தினார். வரலாற்றினூடே, அவர்கள் இராஜ்யத்தில் அவருடைய அதிகாரத்தை அவரிடமிருந்து பறிப்பவர்களாக இருந்து வந்துள்ளனர். மனந்திரும்பும்படி அவர்களை அழைக்கும்படி அவர் அனுப்பின தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்திருந்தனர். கடைசியாக, அவருடைய குமாரனையே அவர்கள் கொலை செய்தனர். ஆகையால், தேவன் அவர்களைத் தண்டித்து, ஒரு புதிய விசுவாச ஜனக் கூட்டத்தை - சபையை ஸ்தாபிக்கவிருந்தார்.

டேவிட் ஸ்டீவர்ட்

## யோவானின் ஞானஸ்நானம் (21:23-27)

கிரேக்க வினைச் சொல்லாகிய *பேப்டிஸோ* எப்பொழுதும் முழுக்குதல் அல்லது முற்றிலுமாக தண்ணீரில் அமிழ்த்துதல் எனும் பொருளைக் கொண்டு வருகிறது. ஒரு நபர் எப்படிப்பட்ட ஊடகத்தின் வழியாக ஞானஸ்நானம் பெற்றாலும் இதுதான் உண்மை. புதிய ஏற்பாடு ஐந்து வகையான ஞானஸ்நானங்களை குறிப்பிடுகிறது. அதிலே ஒன்றுதான் உபத்திரவப்படுதலாகிய ஞானஸ்நானம் (மாற்கு 10:38, 39). மத்தேயு 3:11ல் வேறு இரண்டு (ஞானஸ்நானம்) பெயரிடப்பட்டுள்ளது: பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மற்றும் அக்கினி ஞானஸ்நானம் (பாவிகள் நித்திய நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்பதைக் குறிப்பிடும் வசனம்; 3:11, 12 க்கான விளக்கவுரையைக் காண்க). வேறு இரண்டு ஞானஸ்நானங்கள் யோவான் ஸ்நானன் கொடுத்தது மற்றும் பிரதானக்கட்டளையின்படியான ஞானஸ்நானம் (28:19, 20).

யோவான் "மனந்திரும்புதலுக்கென்று ஞானஸ்நானத்தைக்" கொடுத்திருந்தாலும், ஞானஸ்நானம் பெற்றவர்கள் தங்களுடைய பாவத்திலிருந்து மனந்திரும்பியே ஞானஸ்நானம் பெற்றார்கள் (3:8), அதுவும் "பாவமன்னிப்பிற்காக கொடுக்கப்பட்டதுதான்" (மாற்கு 1:4). அவர்கள் கிறிஸ்துவின் வருகையை நோக்கியும் அவர் சிந்தும் இரத்தத்தை மனதில் கொண்டும் ஞானஸ்நானம் பெற்றார்கள். கிறிஸ்து மரிப்பதற்கு முன் யோவான் ஸ்நானனிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றவர் எவரும் மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றதற்கான பதிவேடுகள் எதுவுமில்லை. பெந்தெகோஸ்தே நாளில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் "எண்ணிக்கையோடே *சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்*" எனும் பதம் (நடபடிகள் 2:41; NIV வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது) சிலர் ஏற்கனவே இராஜ்யத்தில் சேர்க்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டுகிறது. எபேசுவில் பவுலால் மறுஞானஸ்நானம் பெற்ற பன்னிரண்டுபேர் கிறிஸ்துவின் மரணத்துக்குப் பிறகு கிறிஸ்து பிரதானக் கட்டளையில் கட்டளையிட்ட ஞானஸ்நானத்திற்குப் *பிறகு* யோவானின் ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருந்தார்கள் (நடபடிகள் 19:1-7). நியாயப்பிரமாணத்துக்குக் கீழாக வாழ்ந்தவர்களின் பாவங்களையும் கிறிஸ்துவின் இரத்தம் மூடியிருக்குமானால், அவர் சிலுவையில் அறையப்படுவதற்குமுன் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களின் பாவங்களையும் மூடுவது அதிக நிச்சயம் (எபிரெயர் 9:15).

---

குறிப்புகள்

[1]Josephus *Antiquities* 15:11.1. ஏரோது கி.மு. 37ல் ஆளுகை செய்யத் துவங்கினான், தேவாலயப்பணி "அவனுடைய ஆட்சியின் பதினேட்டாம் ஆண்டு துவங்கியது" (கி.மு. 19). [2]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 300. [3]*Psalms of Solomon* 17:21, 30. [4]முதல் நூற்றாண்டில் ஆசாரியர்களின் பேராசைகளை காண்க Josephus *Antiquities* 20.8.8; 20.9.2. [5]Mishnah *Shekalim* 1.1–3. [6]Ibid., 4.8, 9. [7]Mishnah *Bekhoroth* 8.7; Talmud *Kiddushin* 11a. [8]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 526. [9]Mishnah *Kerithoth* 1.7. [10]Mishnah *Berakoth* 9.5.

[11]Donald A. Hagner, *Matthew 14—28,* Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 601. [12]Josephus *Antiquities* 15.11.5; *Wars* 5.5.2; 6.2.4. [13]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 130. [14]Mishnah *Hagigah* 1.1. [15]Hagner, 601. காண்க *Messianic Rule* 2. [16]Morris, 528–29. [17]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 502. [18]2 Maccabees 7:27. [19]காண்க மாற்கு 11:21, இயேசு அத்திமரத்தை "சபிப்பதை" குறிப்பிடுகிறது. [20]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 773.

[21]R. K. Harrison, "Fig; Fig Tree," in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:302. [22]Keener, 505. [23]சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, பேதுருவும், யோவானும் இதே

*கேள்வி கேட்கப்பட்டார்கள் (நடபடிகள் 4:5-7).* [24]W. F. Albright and C. S. Mann, *Matthew*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 260. [25]J. W. McGarvey, *The New Testament Commentary*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 183.